

17.11.2026 செய்திகள்

பிரேசில் தேர்தல் முடிவுகளும் அமேசானின் நம்பிக்கையும்

» கரிமச் சேமிப்பு

- உலகின் மிகப்பெரிய மழைக்காடான அமேசான் 70 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. இந்த மழைக்காடுகளில் மொத்தம் 150 பில்லியன் டன் கரிமம் சேமிக்கப்பட்டிருப்பதாக அறிவியலாளர் கார்லோஸ் நோப்ரே கணித்திருக்கிறார்.
- இது 10 ஆண்டுகளுக்கான உலகளாவிய கரிம உமிழ்வுகளுக்குச் சமம். இவ்வாறு அதிக அளவிலான கரிமம் சேகரிக்கப்படுவதன் மூலம் காலநிலை மாற்றம் தீவிரமடையாமல் தடுக்கப்படுகிறது.
- கரிமத்தைச் சேமிக்கும் இவ்வாறான அமைப்புகளை 'Carbon sink' என்று அழைப்பார்கள்.
- உலகின் மிகப்பெரிய கரிமச் சேமிப்பு அமைப்புகளில் அமேசானுக்கு முக்கிய இடம் உண்டு. வெப்ப மண்டலக் காடுகளில் சேமிக்கப்பட்டிருக்கும் கரிமத்தில் பாதி இங்குதான் உள்ளது.
- அமேசான் மழைக்காடுகளுக்குப் பாதிப்பு ஏற்படும்போது, இவ்வாறு சேமிக்கப்பட்ட கார்பன் மீண்டும் வளிமண்டலத்தில் சேர்ந்து காலநிலை மாற்றத்தைத் தீவிரப்படுத்தும்.
- கரிம சேமிப்பு மட்டுமல்லாது உயிர்ப்பன்மை, மழைப்பொழிவு, ஆக்சிஜன் உற்பத்தி போன்றவற்றிலும் அமேசான் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இங்கு வாழும் தொல்குடிகள் காடுகளைப் பாதுகாப்பதில் பல பங்களிப்புகளைச் செய்கின்றனர்.
- அமேசான் காடுகளில் 60% பிரேசில் நாட்டின் எல்லைகளுக்குள்தான் இருக்கிறது. ஆகவே, பிரேசில் அரசின் சட்டங்களும் முடிவுகளும் அமேசானை நேரடியாகப் பாதிக்கின்றன.
- 2019 முதல் 2022 வரை பிரேசில் அதிபராக இருந்த ஜேர் பொல்சோனாரோவின் ஆட்சிக்காலத்தில் அமேசான் மழைக்காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டன.
- பிரேசிலின் முக்கியச் சுற்றுச்சூழல் அமைப்புக்கான நிதி உதவியும் குறைக்கப்பட்டது. காடுகள் அழிக்கப்பட்டது தொடர்பாக ஆய்வு செய்த அமைப்பின் தலைவரோடு ஏற்பட்ட முரண் காரணமாக, அவரையும் பொல்சோனாரோ பதவிநீக்கம் செய்தார்.
- அமேசான் மழைக்காடுகளின் பல பகுதிகளில் கனிமச் சுரங்கம், மரம் வெட்டுதல், கால்நடை மேய்ச்சல் ஆகியவற்றுக்கு பொல்சோனாரோ அனுமதி கொடுத்தார்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பதைப் பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒரு தடையாக மட்டுமே பொல்சோனாரோ பார்ப்பதாகப் பல சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள் குற்றம் சாட்டினர்.

» முக்கியமான வெற்றி

- அதன்பிறகு அதிபராகப் பொறுப்பேற்ற லூலா பல்வேறு சுற்றுச்சூழல்சார் முன்னெடுப்புகளைக் கையிலெடுத்தார். அவரது ஆட்சிக்காலத்தின்போது வருடாந்திர அமேசான் காடழிப்பு 71% குறைந்தது.
- தொல்குடிகளின் பாதுகாப்புக்காகத் தனி அமைச்சகத்தை அவர் உருவாக்கினார். இதன்மூலம் தாங்கள் வசிக்கும் காட்டுப்பகுதிகளில் முக்கிய முடிவுகள் எடுப்பதற்குத் தொல்குடிகளுக்கு அதிகாரம் கிடைத்தது. அவரது ஆட்சிக்காலத்தில் கரிம உமிழ்வும் குறைந்தது.
- பிரேசில் என்கிற ஒரு தனி நாட்டில் லூலா பெற்றிருக்கும் இந்த வெற்றி புவி அரசியலுக்கும் உலகளாவிய காலநிலை மாற்றச் செயல்பாடுகளுக்கும் மிகவும் முக்கியம் என்று வல்லுநர்கள் அழுத்தமாகத் தெரிவிக்கின்றனர்.
- குறிப்பாக, மழைக்காடுகளை அதிகம் கொண்ட இந்தோனேசியா, காங்கோ போன்ற நாடுகளின் காட்டுப் பாதுகாப்புச் செயல்பாடுகளில் பன்னாட்டு அளவில் பிரேசில் துணைநிற்கும்.
- தனது உலகளாவிய முக்கியத்துவத்தின் உதவியுடன் ஒரு நிலையான காடுசார் நிதி ஒதுக்கீடு வழிமுறையை பிரேசில் உறுதிப்படுத்திவிட்டால், அது எல்லா வளரும் நாடுகளுக்கும் உதவியாக இருக்கும்.

» நம்பிக்கைக் கீற்று

- பிரேசிலில் கடந்த ஆண்டில் நடைபெற்ற காலநிலை உச்சி மாநாட்டில் அமேசான் காடுகளின் பாதுகாப்பு விவாதிக்கப்பட்டது.
- லூலாவே அதிபராகத் தொடரும்பட்சத்தில் அந்த விவாதங்கள் மீண்டும் கவனம் பெறும்; அவற்றையொட்டிய செயல்பாடுகளும் தொடரும்.
- குறிப்பாக, அமேசான் காடழிப்பு தடுக்கப்படுவதால் கரிமச் சேமிப்பு உறுதிப்படுத்தப்படும், காலநிலையைச் சீராக வைத்துக்கொள்ளும் அமேசான் காடுகளின் பங்களிப்பும் தொடரும்.
- "மீளவே முடியாத நிலைக்கு அமேசான் மழைக்காடுகள் செல்வதைத் தடுக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பு பிரேசிலுக்குக் கிடைத்திருக்கிறது" என்று இந்த வெற்றியைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.
- மழைக்காடு ஆய்வாளர் கார்லோஸ் நோப்ரே. "அமேசான் இப்போது நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொள்ளும்" என்கிறார் காலநிலை ஆராய்ச்சியாளர் டேவிட் லபோலா.
- இப்போதே சிறு நம்பிக்கைக் கீற்றுகள் புலப்படத் தொடங்கிவிட்டன. வெப்பமண்டலக் காடுகளின் நிரந்தரப் பாதுகாப்புக்கான ஒரு நிதியத்தை 2025இல் பிரேசில் முன்னெடுத்தது.
- லூலா மீண்டும் வெற்றி பெற்றிருப்பதால் இது தொடர்ந்து செயல்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.
- நெதர்லாந்து அரசு இந்த நிதியத்துக்கு 500 மில்லியன் அமெரிக்க டாலர் வழங்கப்போவதாகத் தேர்தல் முடிவு வந்தபிறகு அறிவித்திருக்கிறது.
- இது தற்செயலானது அல்ல என்றும், லூலா மீண்டும் வெற்றிபெற்றிருப்பதால் இந்த நிதியம் செயல்படும் என்கிற நம்பிக்கை காரணமாகவே நெதர்லாந்து பங்களிக்க முன்வந்திருப்பதாகவும் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.
- லூலா மீது சுற்றுச்சூழல் செயல்பாடு சார்ந்த சில விமர்சனங்களும் இருக்கின்றன. காடழிப்பு குறைந்தாலும் பிரேசிலின் எண்ணெய் / இயற்கை எரிவாயு உற்பத்தி, பயன்பாடு இன்னும் குறிப்பிட்ட அளவு குறையவில்லை.
- காடழிப்பு தவிர, பிற காலநிலைச் செயல்பாடுகளில் பிரேசிலின் பங்களிப்பு இன்னும் அதிகரிக்க வேண்டும் என்றே காலநிலை வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர்.
- இந்த ஆட்சிக் காலத்திலாவது இதுபோன்ற முரண்பட்ட செயல்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.